1509

1509
4-56

REGISTERED No. M. 6165. அறு. 2

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜனவரி 1957.

விஷயம்.	பக்கம்.
காலத்துக்கேற்ற [illegible]ரியம் அவசியம்	1
ஷாபிஈ மத்ஹபின் சிறப்புகள்	9
இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. ம[illegible] ஸா[illegible]பாகவி)	13
ஏமாற்றம்! (மாஸ்டர் ஹாரிஸ் பாபு)	17
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர்	21
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் [illegible]னின் நல்லுபதேசமும்	27

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 DEC 1956
MADRAS

[illegible] இஸ்லாம் ஆபீஸ்:
[illegible]ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3L
[illegible] 124 F1
K57.
182059

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–8–0
தனிப் பிரதி	அணா.	0–2–0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

மஜ்முஉ மவ்லூது

இதில் ரஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, ஜுப்பி லுத்பிக முனாஜாத்தும், பீஹுப்பி ஸைய்யிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது விலை அணா. 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

1509
4-56

الاسلام

பத்ஹுல் இஸ்லாம்

ஜனவரி—1957.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 ... 1958
MADRAS

காலத்துக் கேற்ற காரியம் அவசியம்.

காலத்தின் போக்குக் கேற்றவாறு காரிய சாதனைகளை மாற்றிக் கொண்டு ஒழுகுவது மனிதர்க்கு இயற்கையான ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. மனித உற்பத்தியின் சரித்திரமே இதை நன்கு விளக்குகிறது. பண்டைய சரித்திரங்களி லிருந்தும் இதை நாம் நன்கு தெரிந்து கொள்கிறோம்.

பூமி கோளத்தின் மீது மனிதன் எப்போது உற்பத்தியானன்? எப்படி பெருகினன்? எப்படி அபிவிருத்திகள் அடைந்தான்? புது முறைகளையும், அறிவு வளர்ச்சிகளையும் எப்படி கற்றுக் கொண்டான்? நாகரிக வாழ்வு அவனுக்கு எப்படித் தெரியவந்தது?—என்பதையெல்லாம் இப்போது ஆராய்ந்து கொண்டிருக்க, நவீன நாகரிக மனித வர்க்கத்துக்கு அவகாசம் ஏது?

பொதுப்படையாய் கற்பனை செய்து கூறுமிடத்து: உலகம் தோன்றி அதில் மனிதன் வதியத் தொடங்கிய காலத்தொடுத்து, மனித சமூகம், ஒவ்வொரு சமய சந்தர்ப்பத்திலும், காலதேச வர்த்தமானத்துக் கேற்ப தன்னுடைய வாழ்க்கைப் போக்கை மாற்றிக்

கொண்டே வந்துள்ள தென்பது தெள்ளென விளங்குகின்றன. இது மனித சுபாவத்துக் கேற்ற ஜீவியத் திட்டமாகவும், வாழ்க்கை முறை யாகவும் இருந்து வருகின்றது.

உலகில் எத்தனையோ மதங்கள் தோன்றின; எத்தனையோ ஷரீஅத்துகள் போதிக்கப்பட்டன; எத்தனையோ அனுஷ்டானத் திட்டங்கள் வகுக்கப்பட்டன; எத்தனையோ தத்துவார்த்திக ளென்னும் பலாஸிபர்கள் தோன்றினர்; எத்தனையோ விவேகிகள் என்னும் ஹுக்கமாக்கள் தோன்றினர்; இன்னோரெல்லாரும், மனித சமூகத்தை ஈன ஸ்திதியிலிருந்து உந்நத ஸ்தானத்திற்கு உயர்த்த வேண்டுமென்ற குறிக்கோள் கொண்டே போதனை புரிந்து பாடுபட்டனர்; பலர் தம் இலக்ஷியங்களில் வெற்றியும் கண்டனர்.

கிழக்கு நாட்டிலும், மேற்கு நாட்டிலும் பல தீர்க்கதரிசிகள் தோன்றியுள்ளனர்; பல மஹான்கள் அவதரித்துள்ளார்கள்; பல போதனைக்காரர்கள் வெளிப்போந்துள்ளார்கள். இவர்களெல்லாரும் தம் போதனைகளிலும் அனுஷ்டானத் திட்டங்களிலும், ஏகபோகமாய் 'ஒரேஒரு' விஷயத்தை மட்டும் எல்லோரும் சரிசமமாய் போதித்து வந்தார்கள். அதாவது: "மனிதர், காலத்துக்கேற்ற முறையில் காரியங்களைச் செய்து கொண்டு போக வேண்டும்" என்பதே யாகும். இதைத்தான் அவர்கள், நற்போதனைகள் என்றும், ஹிதாயத் என்றும், சன்மார்க்கம் என்றும், தஃலீம் என்றும் மக்களுக்கு கற்பித்து வந்தார்கள்.

ஆதியில் மதம் எப்படி உற்பத்தியாயிற்று? முதன் முதல் எப்படி போதிக்கப்பட்டது? அதை மக்கள் எங்ஙனம் ஏற்று ஒழுகினர்? என்றெல்லாம் நாம் ஆரம்ப திசையிலிருந்து சரித்திர பூர்வமாய் துருவி ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டிய அவசிய மில்லை. ஏனெனின் அவைகளை யெல்லாம், முஸ்லிம்களாகிய நாம், நம் ஆதிபிதா பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் காலம் தொடுத்து இறுதி நபி லோகநாதர் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலம் வரையும், மேலும் இந்நாள்வரையும், உள்ள இஸ்லாமியச் சம்பிரதாய சரித்திர வரலாறுகளிலிருந்தே சுலபமாகத் தெரிந்து கொள்கிறோம். உதாரணத்துக்கு நாம் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இஸ்ஸா என்னும் வரலாற்றை

137059

எடுத்துக் கொள்வோம். பாவா ஆதமும், அம்மா ஹவ்வாவும்தான் ஆதிமனிதர்கள்—அதாவது மனித சமூகம் வளர்ந்து பெருகியதற்குரிய மூலவித்துக்கள்—என்பதை அறிந்து கொள்கிறோம். தந்தை ஆதமும் அன்னை ஹவ்வாவும் சுவர்க்க லோகத்திலிருந்து பூமி லோகத்துக்கு அனுப்பப்பட்டவர்கள் என்பதையும் உணர்ந்து கொள்கிறோம்.

இஸ்லாமிய சம்பிரதாய கிஸ்ஸாவின் பிரகாரம், பாவா ஆதமும் அம்மா ஹவ்வாவும் பூமியில் தோன்றியபோது, அவர்கள் என்ன விதமான துணி உடுத்தி, தம் மான அங்கத்தை மூடிக் கொண்டிருந்தனர் என்பது தெரிய வில்லை. இயற்கை நியதியின் பிரகாரம் அவர்கள் யாதொரு அலங்கார மில்லாமல், இயற்கையின் பிரகாரம் வனங்களில் அலைந்துத் திரிந்து வாழ்ந்தனர் என்பது தெரிகிறது. இயற்கையின் பிரகாரம் அவர்களின் உடல்களில் ரோமங்கள் நிறைந்து, காற்றையும் குளிரையும் மழையையும் வெய்யிலையும் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனின் இக்காலத்திலுங்கூட, நாகரிகமே இன்ன தென்றறியாமல் நகர வாழ்வு முறை யாதென்று உணராமல் வனங்களில் வாழும் இனத்தார், ஆப்ரிக்கா காடுகளில் காணப்படுகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர், தம் உடலைப் பூரணமாய் மறைப்பதில்லை; அப்படி மறைக்க வேண்டு மென்ற அவசியமும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இது தான் இயற்கையின் வாழ்வு முறை.

இந்த முறையில் தான் பாவா ஆதமும், அன்னை ஹவ்வாவும் ஆதி நாட்களில் இருந்திருப்பார்கள் என்று நாம் அனுமானித்து உணர்வதில் தவறு ஏதும் இல்லை. நிர்வாணமாய் இருப்பதென்று இந்த 20-ம் நூற்றாண்டு நாகரிக மக்களாகிய நமக்கு லஜ்ஜையாகவும் வெட்கமாகவும் இருக்கலாம்; பிறந்த குழந்தைகள் நாலைந்து ஆண்டு வரை, உடை உடுத்துக் கொண்டு வாழவா விரும்புகின்றன! பெற்றோரின் வலுக் கட்டாயத்திற்காகத் தானே அவை கால் சட்டையும், அரை நிஜாரும், சொக்காயும், மேல் சட்டையும் போட்டுக் கொள்கின்றன.

இந்த இயற்கை நியதியின் பிரகாரமே, ஆதிமாந்தர் உலகில் எதேச்சையாய் வாழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை. மேலும், ஆதம் நபியுடைய மக்களுக்கு, ஆண்டவன் இயற்கை முறைப்படியும்

செயற்கை முறைப்படியும் வாழ்க்கை முறைக்காக பல உத்த வழிகளைக் கற்பித்துக் கொடுத்தான்.

"அல்லமல் இன்ஸான மாலம் யஃலம்"
"அல்லமல் ஆதம அஸ்மாஅ"

(1) மனிதர்க்கு, அவன் அறியாதிருந்தவைகளை யெல்லாம் ஆண்டவன் கற்பித்துக் கொடுத்தான்..

(2) ஆதமுக்கு ஆண்டவன் (உலகப் பொருட்களின்) பெயர்களை யெல்லாம் கற்பித்துக் கொடுத்தான்.

திருக்குர்ஆனில் உள்ள இத்திருவாக்கியங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆதமாகிய மனித இனத்தார், ஆதியில் உலகில் தோன்றியபோது ஒன்றும் தெரியாதவர்களாய் இருந்தனர்; பிறகே கால நிலை சூழ்முறைக்கேற்ப, அவர்களுக்குத் தேவையானதை ஆண்டவன் உற்பத்தி செய்து தந்தான்; அல்லது கற்பித்துக் கொடுத்தான் என்று, திருக்குர்ஆன் வாக்கியங்களிலிருந்து நன்கு விளங்குகிறது.

இங்கு 'கஸஸுல் அன்பியா' விலுள்ள ஒரு சிறு சம்பவத்தை எடுத்தோத விரும்புகிறேன்: மனித உடல் அமைப்பும் அந்த ஆதி காலத்தில் விகசிதமாகவே இருந்தது. இக்காலத்தைப்போல், 9-மாதம் கர்ப்பத்தில் தங்கி பத்தாவது மாதம் சிசு உற்பத்தியாகிறதே அப்படியல்ல அக்காலத்தில். உலகத்தில் மனிதப் பிறவிகள் அதிசீக்கிரம் விருத்தியாகவேண்டுமென்று ஆண்டவன் காட்டங்கொண்டிருந்ததால், ஆதம்—ஹவ்வா உடல் அமைப்பிலும் சில அற்புத சக்தியை அமைத்திருந்தான். எனவே காலையில் ஓர் ஆண் குழந்தையையும், மாலையில் ஒரு பெண் குழந்தையையும் பெற்றுப் போட்டுக் கொண்டே இருந்தனர்; அக்குழந்தைகளும் இயற்கைமுறைப்படி சுயமே வளர்ந்து உடனுக்குடன் பெரிதாகி நடந்து, தாய் தந்தையுடன் சென்று விளையாடி வாழுமாம்.

ஆதம்—ஹவ்வா தம்பதியர்க்குப் பிறந்த பிள்ளைகளில் ஹாபீல் என்றும் காபீல் என்றும் இரு குமாரர்கள் இருந்தனர்; மற்றும் பல தம்பிமார்களும், தங்கைமார்களும் இந்த ஹாபீல்—காபீல்களுக்கு

இருந்தனர். அக்காலத்தில், ஆண்டவனின் கல்பனைப் பிரகாரம் பாவா ஆதம் என்ன சன்மார்க்கம் போதித்திருந்தாரென்ருல், பிள்ளைகள் வளர்ந்து வயதுக்கு வந்ததும், காலையில் பிறந்த ஆண்மகன், மாலையில் பிறந்த பெண்ணையே ஜோடியாக (மனைவியாக)ச் சேர்த்துக் கொண்டு கூடி வாழவேண்டும் என்பதாகும். இதன்படி ஹாபீல் தன் உடன் பிறந்த தங்கையையும், காபீல் தன்னுடன் பிறந்த தங்கையையும் ஜோடி சேர்த்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வந்தது.

ஆனல், உலகில் இப்லீஸ் என்னும் ஷைத்தானுடைய தீய செயல்களுக்கும் ஆண்டவன் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிருனல்லவா? அந்த ஷைத்தானுடைய தீயதூண்டுதலுக்கு ஹாபீல் என்ற மூத்தவன் இலக்கானுன். அதாவது தம்பி காபீலுடன் பிறந்த பெண், அண்ணன் ஹாபீலுடன் பிறந்த பெண்ணைவிட சற்று அழகாகவும் நல்ல தேக நிறமுடையவளாகவும் இனிய சுபாவமுடையவளாகவும் காணப்பட்டாள். ஷைத்தானுடைய மாய்கையில் சிக்கிய ஹாபீல், தன்னுடன் பிறந்தவளை ஜோடி சேர்த்துக் கொள்வதை மறுத்து நிராகரித்து விட்டு, காபீலுடன் பிறந்த அழகிய பெண்ணை அபகரித்துக்கொள்ள முற்பட்டான். இருவர்க்கும் சண்டை ஏற்பட்டது. இதை பாவா ஆதம் கண்டித்து, விலக்கி வைத்தார்கள். இப்லீஸ் என்னும் ஷைத்தான் சும்மா இருக்கவில்லை. ஹாபீலுடைய மனதில் தீய ஊசாட்டத்தைப் போட்டான்: "ஏ ஹாபீல், நீ அந்தப் பெண்ணை விடாதே! காபீல் இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் போது அவன் தலையில் ஒரு பெரிய கல்லை தூக்கிப் போட்டுவிடு; அவன் செத்துப் போவான்; அப்புறம் அந்தப் பெண்ணும், இந்தப் பெண்ணும் ஒருமிக்க உனக்குத்தான்" என்று போதித்தான். ஹாபீல், இப்லீஸுடைய தீய போதனைப்படியே, காபீலைக் கொன்று விட்டான். இச்சம்பவம் பாவா ஆதமுக்குத் தெரியாமல், தனியே வேறு ஓர் இடத்தில் நிகழ்ந்து விட்டது. கால் கரம் அசையாமல் கிடக்கும் காபீலுடைய உடலை (மையித்தை) என்ன செய்வதென்று ஹாபீலுக்குப் புரியவில்லை. பிறந்த நாள் முதல் கூடவே இருந்துப் பழகிய உடன்பிறந்தானை விட்டுப் போகவும் ஹாபீலுக்கு மனம் துணியவில்லை. எனவே, உயிரற்ற உடலை ஹாபீல், தன் தோள் மீது சுமந்து கொண்டு, தந்தை இருப்பிடத்தையும் இழந்து விட்டு அந்த துஷ்டப் பிள்ளை காடு மேடெல்லாம் அலையலானுன்.

சரீரத்திலுள்ள ஜீவன் போய் விட்டால், சடலம் உயிரற்று ஒன்றுக்கும் உதவாததாய் விடுகிறது. ஒன்றுக்கும் உதவாத சடலத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? நாறிநாற்ற மெடுத்து கெட்டுப் போய் விடுகிறதே இதெற்கென்ன பரிகாரம் செய்வது? இதற்கொரு பரிகாரம் செய்ய ஹாபீலுக்குத் தெரிய வில்லை. அப்போது அல்லாஹு தஆலா, "அல்லமல் இன்ஸான மாலம் யஃலம்" (மனிதன் அறியாதிருந்ததை ஆண்டவன் அவனுக்குக் கற்பித்துக் கொடுத்தான்) என்பதற்கேற்ப ஓர் உபாயம் செய்தான்.

ஹாபீல், காபீலுடைய சவத்தை மடியில் போட்டுக் கொண்டு சோகமாய் சோர்ந்து உட்கார்ந்திருந்த இடத்திற்கு (ஆண்டவன் கட்டளைப்படி) இரண்டு காகங்கள் வந்தன. அவை வந்ததும் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொண்டன. பெரிய காகம் சிறிய காகத்தை கொன்று விட்டது. பிறகு அந்த உயிருடனுள்ள காகம், தன் மூக்கு இலகினால் பூமியைக்கிளறி குழிதோண்டியது. அந்தக் குழியில் செத்ததின் உடலைத் தள்ளி அதன் மேல் மண்ணைப்போட்டு மூடி விட்டுப் பறந்து போய் விட்டது. இதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்த ஹாபீலுக்கு, சட்டென யோசனை தோன்றியது. அந்த கொலைக்கார காகத்தைப்போலவே, ஹாபீலும் பூமியில் பெரிய பள்ளம் தோண்டி, தம்பி காபீலுடைய சடலத்தைத் தள்ளி மண் போட்டு மூடி மறைத்து விட்டு தன், தாய்—தந்தையிடம் போய் சேர்ந்தான். "காபீல் எங்கே?" என்று கேட்டதற்கு, "எனக்குத் தெரியாது, அவன் எங்கு போய் செத்தானோ?" என்று பொய் சொல்லி தப்பித்துக் கொண்டான்.

"பெண்ணாசை கொண்டவன் கொலையும் செய்வான்; கொலை செய்தவன் பொய்யும் சொல்வான்; மனோவேதனையும் படுவான்" என்பது இந்த கிஸ்ஸாவி லிருந்து தெரிய வருகிறது. இந்தக் கதா சாரத்தை நாம் இங்கு எடுத்து விளக்கியதன் கருத்து வேறாகும். அதாவது: "காலத்துக் கேற்றபடி காரியம் செய்ய வேண்டியது அவசியம்" என்பதாகும்.

பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் காலத்திலும், இலாஹி தீனே, என்னும் ஷரீஅத்து இருந்தது. பாவா ஆதம், தம் பிள்ளைகளுக்கு—இனத்துக்கு போதித்தனரே அது ஷரீஅத்துதான். அந்த காலத்து

ஷரீஅத்து போதனை வேறு; இந்த காலத்து ஷரீஅத்து போதனை வேறுதான். அதாவது, அக்காலத்தில் தங்கையை அண்ணன் மனைவியாக்கிக் கொண்டு வாழ்வது ஆகுமான அனுஷ்டானமாய் இருந்தது. இந்த முறையிலேயேதான் ஜனவிருத்தி அதிகரித்தது. ஆனால் இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடைய ஷரீஅத்தாகிய தீனுல் இஸ்லாமிய சம்பிரதாயத்தில், தங்கையை அண்ணன் மணந்து கொள்வது ஜாயிஸ் இல்லை. அந்த வழக்கம் அந்தக் காலத்துக்கு அவசியமாய் இருந்தது; இது இந்தக் காலத்துக்கு ஆவசியகமாய் இருக்கிறது. அதுவும் தீனே இலாஹிதான்; இதுவும் தீனே இலாஹிதான். இரண்டிலும் லோகத்துக்கும் மனித சமூகத்துக்கும் நன்மை யிருக்கிறது. உத்தமப் பெரிய மனிதர்கள் நமக்கு எதை போதிக்கிறார்களோ அதன்படி நடப்பதே நல்லொழுக்கமாகும்.

'ஷரீஅத்தே முஹம்மதீ' என்னும் நம் இஸ்லாமிய சன்மார்க்கத்தில் எத்தனையோ சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன; எத்தனையோ மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன; ஆத்மார்த்த முறையில் மட்டுமல்லாமல், கால தேச வர்த்தமான சூழ்நிலைக் கேற்பவும் பலப்பல மாறுதல்கள்—சீர்திருத்தங்கள்—அவசியங்கள் உண்டாய்க் கொண்டே இருக்கின்றன. இதெற்கெல்லாம் உதாரணங்கள் எடுத்துக்கூறி விளக்குவதாயின் இந்த ஏடும் காலமும் போதாது.

முஸ்லிம் சோதரீர்! 'லா இக்ராஹ பித் தீனி' (மார்க்க விஷயங்களில் பலவந்த மில்லை)—"இன்னல்லாஹ யுரீது பிகு முல் யுஸ்ர, வலா யுரீது பிகு முல் உஸ்ர" (ஆண்டவன் உங்களைக் கொண்டு இலேசைத் தான் விரும்புகிறான்; கஷ்டத்தை விரும்புவதில்லை") என்ற திரு வாக்கியங்களை ஓதி உணர்ந்து, காலத்துக் கேற்ற முறையில் அவசியமான நற்காரியங்களைச் செய்து, இகத்திலும் பரத்திலும் நன்மை யடைவீர்களாக! வஸ்ஸலாம்.

இனாம்! இனாம்!!

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1957.

இங்கிலீஷ், தமிழ், அரபு, ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

2-வது பகுதி.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் காலம்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் வாழ்ந்த காலமும் சூழ்நிலையும் எப்படிப்பட்டதா யிருந்தது என்பதைக் கவனித்தால், இமாம் அவர்களுடைய குணமும் ஒழுக்கமும் இலக்ஷியமும் நோக்கமும் சேவையும், எவ்வளவு உக்கதமாயிருந்தன என்பது நன்குபுலப்படும். இதை நாம் சரித்திர பூர்வமாய் ஆராய்ச்சி செய்து கொள்வதற்குப் பதிலாய், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ள சுயசரித்திர வாக்கியங்களைக் கொண்டே தெரிந்து கொள்வோம். எனவே இமாம் அவர்கள் கூறியிருப்பதாவது:—

"நான் பரிபூரணமாக இன்னம் வாலிப் பருவத்தை அடையாத வனாக (பால்யனாக)வே இருந்தேன். அப்போது நான் ஒருமுறை, என் சுபசொர்ப்பனத்தில், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்களின் புனிதத் திரு உருவத்தைக் கண்டேன். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் என்னை நோக்கி "ஏ, சிறுவனே" என்று கூப்பிட்டு என்னை அருகில் அழைத்தார்கள். நான் அண்மையில் பணிந்து "லப்பைக்க, யாரஸூலல்லாஹ்" என்று ஜவாபு சொன்னேன். அதற்கு நாயகம் (ஸல்) மீண்டும் என்னை நோக்கி "நீர் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "நாயகமே, நான் தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான்; அதாவது 'குரைஷ்' குலத்தைச் சேர்ந்தவன்தான்" என்று பதில் மொழி சொன்னேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "மர்ஹபா, அப்படியானால் என் அருகில் மிகவும் சமீபித்து வாரும்" என்று கட்டளையிட்டார்கள். நான் அவர்கள் அருகில் மிகவும் நெருங்கிச் சென்று அமர்ந்தேன். "நீ உமது வாயைத் திறந்து காட்டும்" என்று சொன்னார்கள். நான் வாயைத் திறந்து காட்டினேன். எனவே, அப்பெருமானார் (ஸல்) தம் வாயில் கை வைத்து (எதையோ எடுத்து) என் வாயில் போட்டு, "நீ இதை விழுங்கிக்கொள்வீராக; 'பாரக்க பீக்க'—இதைக்கொண்டு இறைவன்

உமக்கு பரக்கத்துச் செய்வான்'' என்று சொன்னார்கள். நானும் அப்படியே செய்து, கட்டளையை நிறைவேற்றினேன்.

"அல்ஹம்து லில்லாஹ்! நான் அன்று தொடுத்து நான் அறிவாற்றலில் மிகவும் உயர்ந்த பதவி அடைந்து விட்டேன். என்னுடைய வாக்கில் ஒரு புது சக்தியும், என்னுடைய குரலில் ஒரு புது இனிமையும் காணப்பட்டன. இதைக்கொண்டு, ஜனங்கள் என் பேச்சை பெரிதும் கேட்கவும் கருத்தைப் பாராட்டவும் தொடங்கினார்கள்'' என்பதாகும்

இமாம் மாலிக்கின் சிஷ்யரானார்கள்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்கு வயது பதினைந்து இருக்கும். அப்போதே, இஸ்லாமியக்கலை யனைத்தையும் ஒருவாறு கற்றுத் தேர்ந்தார்கள். ஆயினும் கல்வியாராய்ச்சியில் அதிகம் தேட்டம் உடையவர்களாகி, மேற்கொண்டு உக்கதப் பயிற்சியை நாடி, அறிவிற் சிறந்த பெரியார் ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் திருச் சமுகத்தில் சென்று, தம்மை சிஷ்யராக(ஷாகிர்தாக) ஏற்றுக்கொள்ளு மாறு வேண்டிக்கொண்டார்கள். அதன்படியே அப்பெரியாரின் திருச் சமுகத்தில் இருந்து பயிலத் தொடங்கினார்கள். இந்தக் கல்விப் பயிற்சி அநுபவத்தை யொட்டி இமாம் ஷாபிஈ (ரஹ்) சொல்லி யிருக்கும் வாக்கியங்களாவன:—

"நான் ஹஜ்ரத் மாலிக் (ரஹ்) அவர்களின் திருச்சமுகத்தை யடைந்ததும், அவர்கள் என்னை ஏதேனும் ஓதச்சொல்லுவார்கள். நான் ஓதுவேன். அங்ஙனம் ஓதுவதை அவர்கள் மிகவும் ரசித்து, என் சொல்லிலும் செயலிலும் ஆழ்ந்து சிறிது பரவசமடைந்திருப்பார்கள். என் முகத்தையும் சுபாவத்தையும் கூர்ந்து நோக்குவார்கள். (இப்படி என்என் முகத்தோற்றத்தையும் ஆராய்ந்தார்க ளென்று நான் பிறகு தெரிந்து கொண்டேன்; இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், தீர்க்க ஞானம் உடையவர்களாகவும் அங்க லக்ஷண சாஸ்திரம் தெரிந்தவர் களாகவும் இருந்தார்கள்.)

ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் என் தோற்றத்தையும் சுபாவத்தையும் கூர்ந்து பார்த்துவிட்டு, "பிள்ளாய், உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு நான் "என் பெயர் முஹம்மத்'' என்று சொன்னேன். இமாம் அவர்கள் என்னைப் பிரியமாய் நோக்கி "ஏ, முஹம்மத்! எப்போதும் ஆண்டவனுக்குப் பயந்து ஒழுகிக் கொள்வீராக: பாப எண்ணங்களை—பாப காரியங்களை விட்டும் பேணிக் கொள்வீராக; இதுதான் நீவிர், உக்கத ஸ்தானம் பெறுவதற்கும், இறைவனுடைய திருப்தியை அடைவதற்கும், உலகம் உன்னை ஒப்புக்கொள்வதற்கும் தகுந்த சாதனங்கள்; இயற்கையாகவே நீவிர்,

'லுத்பே முஹம்மதிய்யா' என்னும் திருநபி சுபாவ பாக்யம் என்னும் அருள் பெற்றவராகவே இருக்கின்றீர்'' என்று பாராட்டினர்கள்.

மீண்டும் 'முஅத்தா' கித்தாபு பயிற்சி

ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், என்னை நோக்கி ''என்னிடம் என்ன ஓதிக் கொள்ள விரும்புகின்றீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு நான் ''முஅத்தா'' என்னும் ஹதீது கித்தாபை ஓத விரும்புகிறேன்'' என்று சொன்னேன். அதற்கு ஹஜ்ரத் மாலிக் அவர்கள், ''இதுகாறும் நீவிர் முஅத்தா ஓதவில்லையா?'' என்று கேட்டார்கள். அதற்கு, நான் ''ஹஜ்ரத்! நான் அதை ஓதியிருக்கிறேன்; ஆயினும் அதை தங்களிடம் மீண்டும் ஓதிக் கொள்ள விரும்புகிறேன்'' என்று சொன்னேன். அதைக் கேட்டு இமாம் அவர்கள், ''முஅத்தா ஹதீது கிரந்தத்தை கிராஅத்து (ராக) காயிதாவுடன் ஓத விருப்பமா?'' என்று கேட்டார்கள். அதற்கு நான் ''ஹஜ்றத்! நானும் ஒரு காரீயாக (இனிமையாக ஓதுபவனாக)த் தான் இருக்கிறேன்; எனினும் அதை தங்களிடம் அந்தரங்கப் பொருள் விளங்கி ஓத விரும்புகிறேன்'' என்று கூறினேன்.

என் கல்விப் பயிற்சியின் தேட்டத்தைக் கண்டு இமாம் அவர்கள் மிகவும் திருப்தி அடைந்தார்கள். அது தொடுத்து தினமும் பாடமும் போதனையும் நடைப்பெற்றன. பிறகு நான், நெடுங்காலம் ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் திருச் சமுகத்திலேயே இருந்து, பல கிரந்தங்களை கற்றுணர்ந்தேன். அவர்கள் சமுகத்தில் வீற்றிருப்பதே மாபெரும் பிரயோஜனகரமான விஷயமாய் இருந்தது. பிறருக்கு விஷயங்களை அவர்கள் எடுத்துச் சொல்லும் போது, அவர்கள் வாயிலிருந்து அநேக அரிய தத்துவங்கள், மலர் மழைபோல் பொழியும்.

ஆசிரியரின் ஆசீர்வாதம்

இங்ஙனம் நெடுங்காலம் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள், ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் சிஷ்யராக அமர்ந்து, இஸ்லாமிய ஹதீதுக் கலையை கசடறக் கற்றுத் தேறினர்கள். இன்னமும் மேன்மேலும், கல்வியைக் கற்றுத் தேருவதற்காக எண்ணங் கொண்டார்கள். எனவே, ஹஜ்ரத் அவர்களை யணுகி, ''ஹஜ்ரத், நான் இன்னம் இல்மை கற்றுக் கொள்வதற்கு வெளியூர்களுக்கு 'ஸபர்' போக விரும்புகிறேன்; தாங்கள் எனக்கு உத்தரவு கொடுத்து ஆசிர்வதித்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கு ஹஜ்ரத் மாலிக் அவர்கள், ''அன்பர் முஹம்மதே! இறைவனின் திருவருள் என்னும் நூர் உம்மிடம் நிறைந்திருப்பதைக் காண்கிறேன். அது உம்முடைய ஹிருதயத்தை பிரகாசப் பொக்கிஷமாகச் செய்யப் போதும். நான் உம்மை மனப்பூர்வமாக ஆசிர்வதிக்

கிறேன். போய்வர அனுமதிக்கிறேன்; என்னுடைய ஒரே ஒரு புத்திமதி யாதெனின்: நீர் எங்கிருந்த போதிலும் ஒழுக்கந்தவறாமல் இருப்பீராக; ஆண்டவனை சதா நினைந்து உருகுவீராக. உலக ஆசாபாசங்களில் மூழ்கிப் போகாதிருப்பீராக" என்று ஆசீர்வதித்தனுப்பினார்கள்.

பக்தாத்துக்கும் மக்காவுக்கும் இமாம் ஷாபிஈயின் பிரயாணம்.

ஹிஜ்ரீ 195-ம் ஆண்டு, இமாம் முஹம்மத் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், இராக் தேசத்திலுள்ள பக்தாத்மா நகருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பக்தாத் நகரத்தில், தம்மைவிட பெரிய யாரேனும் ஆலிம் உலமாக்கள் இருந்தால், அவர்களுடைய திருச் சமுகத்தை யணுகி, இஸ்லாம் மதத் தத்துவார்த்தங்களைப் படித்தறிந்து கொள்ள வேண்டுமென்பது, இமாம் ஷாபிஈ அவர்களுடைய எண்ணம். ஆனால் அக்காலை ஆங்கு அப்படிப்பட்ட பெரிய மேதாவி யாருமில்லை. அதற்கு மாறாய், பக்தாத் வாசிகள், நம் இமாம் முஹம்மத் ஷாபிஈ அவர்களையே மகா மேதாவியாகவும், நன்கு கற்றுத் தேர்ந்து பயிற்சி பெற்ற ஆலிமாகவும் கண்டார்கள். எனவே, பக்தாத் வாழும் ஆலிம் உலமாக்கள் நம் இமாம் அவர்களிடம் வந்தமர்ந்து, குர்ஆன், ஹதீது, கல்வி கற்றுக் கொள்ளலானார்கள்.

இமாம் முஹம்மத் ஷாபிஈ அவர்கள், பக்தாத் நகரில் இருந்து கொண்டு, குர்ஆன் ஹதீது கட்டளைகளை நன்கு ஆராய்ந்து, பூர்வீகமான பெரிய கிதாபு ஒன்றை இயற்றினார்கள். இந்த கிதாபிலுள்ள அரிய மஸ்அலாக்களையும் கருத்துக்களையும், அக்காலத்து உலமாக்கள் மிகவும் பாராட்டினார்கள்.

அதன் பின், இமாம் முஹம்மத் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பக்தாதிலிருந்து திருமக்காவுக்குப் பிரயாணமானார்கள். அங்கு பல பெரியோர்களை தரிசித்து, குர்ஆன் ஹதீது கலையை ஆராய்ச்சி செய்தார்கள். பிறகு அங்கிருந்து மீண்டுமொருமுறை, பக்தாத் நகருக்கே வந்து ஒன்றிரண்டு மாதம் தங்கி இஸ்லாமிய சேவை புரிந்து கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு, எகிப்து என்னும் மிஸ்ர் தேசத்துக்குப் பிரயாணம் செய்தார்கள். எகிப்து நாட்டில் பல நாள் தங்கியிருந்து, இஸ்லாமியக் கலைகளை ஆராய்ச்சி செய்து, பல நூல்களை இயற்றினார்கள். அவைகளில் குறிப்பிடத் தக்கவை: (1) அமாலி, (2) இம்லாய் ஸகீர், (3) முக்தஸர் பூயத்தி, (4) முக்தஸர் மஸ்னி, (5) மிஸ்னுஅம், (6) முக்தஸர் ரபீஃ, (7) ரிஸாலா ஸுனன் முதலியவைகள் ஆகும்.

(தொடரும்)

இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

ஹிஜ்ரீ 51–லிருந்து 100–வரை.

(டி. எப் ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

ஹிஜ்ரி-75:

(1) இது, க்வாரிஜியாக்கள் பனி உமய்யாக்களுக்கு கடும் விரோதிகளாய் இருந்துவந்த காலம். முன்னர், முஸ்அப் என்பாரைக் கொன்ற முஹ்லிப் என்பார், அதிபர் அப்துல் மலிக் இடம் நம்பிக்கை தெரிவித்து 'பைஅத்து' செய்து கொண்டிருந்தார். பிறகு இவர், அதிபர் அப்துல் மலிக்குடைய உத்தரவுப்படி, க்வாரிஜிய்யாக்கள் மீது இவ்வாண்டு படையெடுத்துச் சென்று தாக்கினர். பலம் குன்றிப் போன க்வாரிஜியாக்கள், ஆஹ்வாஸ் என்ற பிரதேசத்திலிருந்து வெளியேற்றி பாரஸ் (பாரசீகம்) பக்கம் ஓடிப்போகும்படிச் செய்துவிட்டார்.

ஹிஜ்ரி-76:

(1) அதிகாரி அப்துல் மலிக், வட ஆப்ரிக்காவில் இஸ்லாமிய ஆட்சிக்கு விரோதமாய் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த கலகக்காரக் கோஷ்டியை அடக்குவதற்காக, ஹிஸ்ஸான் பின் நுஃமான் என்பவரின் தலைமையில் முஸ்லிம் வீரர்களின் ஒரு பட்டாளத்தை அனுப்பி வைத்தார். ஆயினும் அப்பட்டாளத்தால், அந்நாட்டு புரட்சிக்காரர்களை அடக்கி ஒடுக்க முடியவில்லை. எனவே ஹிஸ்ஸான் என்பார், திரும்பி வர மனமில்லாமல், பர்பா என்ற இடத்தில் முகாம் செய்து தங்கி விட்டார்.

(2) 'அஸ்ஹாபே ஸுஃப்பா' என்னும் சிறப்புப் பெற்ற திருநபித் தோழர்களில் ஒருவரான இர்பால் பின் ஸாரியா (ரவி) அவர்கள் இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

ஹிஜ்ரி-77:

(1) இஸ்லாமிய அமீர் அப்துல் மலிக், கிழக்கு நாட்டில் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்த ஆதிக்க நாடுகளில் மேலதிகாரம் செய்வதற்காக, இவ்வாண்டு ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப் அவர்களை 'நாயிபாக்' (கவர்னராக) நியமனம் செய்தனுப்பினர்.

ஹிஜ்ரி-78:

(1) ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப், க்வாரிஜியாக்களின் கொட்டத்தை அடக்கி ஒடுக்குவதில் இவ்வாண்டுதான் வெற்றி பெற்றார். பல பேர்களைப் பொறுக்கிப் பொறுக்கி கொன்று போட்டார்.

(2) பெரிய ஸஹாபிகளில் ஒருவராகிய ஜைது பின் காலித் (ரவி) அவர்கள், இவ்வாண்டு கூபா பிரதேசத்தில், தமது 85-ம் வயதில் வபாத்தாகி இறந்து போனார்கள்.

(3) பிரபல 'தாபிஈ' பெரியாராகவும், மகத்தான 'பகீஹ்' ஆகவும், சீரிய ஆலிமாகவும் விளங்கிய அப்துர் ரஹ்மான் கனமுல் அஷ்அரி என்பார் இவ்வாண்டே இறந்து போனார்கள்.

ஹிஜ்ரி-79:

(1) அதிகாரி அமீர் அப்துல் மலிக், இவ்வாண்டு ஒரு பெரிய காரியம் சாதித்தார். அதாவது, வடக்கு ஆப்ரிக்காவில் புரட்சிக்காரர்களை அடக்க முடியாமல் புர்க்கா என்ற பிரதேசத்தில் ஒதுங்கிக் கிடந்த கிழதிகாரியான ஹஸ்ஸானுக்கு, இவர் மேற்கொண்டு உதவிப் படைகளை அனுப்பி வைத்தார். அவர் இப்படைகளின் உதவி கொண்டு தீவிரமாய் போரிட்டார். இதன் பயனாய் வடக்கு ஆப்ரிக்கா முழுதும் முஸ்லிம்களுடைய ஆட்சிக் குட்பட்டு விட்டது. ஏராளமான பர்பரி ஜாதியினர் இதனால் தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டு முஸ்லிம்களானார்கள்.

ஹிஜ்ரி-80:

(1) இவ்வாண்டுதான், கூபா நகரத்தில் இமாம் அஃலம் ஹஜ்ரத் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

(2) ஹஜ்ரத் அபூதாலிப் (ரலி) அவர்களுடைய பேரப்பிள்ளையாகிய அப்துல்லாஹ் பின் ஜஃபர் அவர்கள், ஹபஷா (அபிஸ்ஸீனியா) முஸ்லிம்களுடைய இல்லத்தில் (முதல் இஸ்லாமியக் குழந்தையாக) பிறந்தார்கள். பிறகு இப்பெரியார் 90 வருஷம் ஜீவித்திருந்து, இஸ்லாத்திற்கு நல்லூழியம் புரிந்து மதீனமா நகரில் இறந்து போனார்கள்.

(3) பண்டைய இஸ்லாமியப் பெரியார்களில் சிறப்பு மிகுந்தவரும் பழைய சஹாபிகளில் ஒருவருமான ஹஜ்ரத் ஸுஹைப் ரூமி (ரலி) அவர்கள், மதீனமா நகரில் தமது 90-ம் வயதில் இவ்வாண்டு இறந்து போனார்கள்.

(4) இவ்வாண்டு பண்டைய முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்குமிடையில், கைஸாரிய்யா என்னுமிடத்தில் மிகவும் கடும் போர் ஒன்று நடை பெற்றது. இதில் இறுதி வெற்றி முஸ்லிம்களுக்கே கிடைத்தது.

ஹிஜ்ரி-81:

(1) அமீர் அப்துல் மலிக் அவர்கள், தமது அதிகாரத்திற்குட்பட்ட எல்லா இஸ்லாமிய நாடுகளிலும், அரபி பாஷையே அரசாங்க மொழியாக இருக்க வேண்டு மென்று உத்தரவு பிறப்பித்தார். இதனால் அரபு மொழி இஸ்லாமிய உலகமெல்லாம் எளிதில் வியாபகமடைந்தது.

ஹிஜ்ரி-82:

(1) அமீர் அப்துல் மலிக் அவர்கள், தமது கிலாபத்துக்கு ஒரு முக்கிய ஸ்தலமான தமிஷ்கில் (டமாஸ்கஸில்) ஒரு தங்கசாலையை

(நாணய—காசுகள் அச்சிடும் உலேக்கூடத்தை) ஸ்தாபிதம் செய்தார். இவ்வாண்டு இங்கு, இஸ்லாமிய நாணயங்கள் முதன்முதலாய் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டன. அந்த நாணயங்களில் அரபி கலீமாக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதில் தங்க நாணயத்தின் பெயர் 'தீனர்' என்றும், வெள்ளி நாணயத்தின் பெயர் 'திர்ஹம்' என்றும் வைக்கப்பட்டது.

(2) ஸினன் கோட்டையை, இவ்வாண்டே முஸ்லிம்கள் பிடிக்க முடிந்தது; இதற்கு முன்னும் பல முறை முயற்சித்து முடியாமற் போயிற்று.

(3) மூஸா பின் நஸீர் என்பார், வடக்கு ஆப்ரிக்காவில் இஸ்லாமிய கிலாபத் ஆட்சியின் ஓர் அதிகாரியாக (கவர்னராக) இவ்வாண்டு நியமனம் பெற்றார்.

ஹிஜ்ரீ-83.

(1) ஷீஆக்களால் மிகவும் போற்றப்படும் பெரியாராகிய இமாம் ஜஃபர் ஸாதிக் (ரலி) அவர்கள், இவ்வாண்டு ரபீவுல் அவ்வல் மாதம் 17-ந் தேதி, மதீனா முனவ்வராவில் பிறந்தார்கள்.

(2) ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப் அவர்கள், இவ்வாண்டு, வாஸித் என்ற நகரத்தை சிருஷ்டிப்பதற்கு, அடிப்படை போட்டு நிர்மாண வேலையை தொடங்கி வைத்தார்.

(3) இவ்வாண்டு, இஸ்லாத்துக்கு விரோதமாக, அல்ஜீரியாவிலும் டியூனிஸிலும் பர்பரி என்னும் புரட்சிக்காரர்கள் கலகத்தை மூட்டினார்கள். அப்போது அதை அடக்கி ஒடுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மூஸா பின் நஸீர் அவர்கள், எதிரிகளை ஒடுக்கி விரட்டியடித்து, புரட்சியை ஒழித்து வெற்றி பெற்றார்.

ஹிஜ்ரீ-84.

(1) கலீபா அப்துல் மலிக்கினால் கவர்னராக நியமிக்கப்பட்டு, திறமையுள்ள சேனாதிபதி (ஸிபஹ் ஸாலார்) என்று பெயர் பெற்று, பிறகு குராஸான் தேசத்துக்கு அதிபதியாய் நியமனம் பெற்றிருந்த வீரர் முஹ்லிப் அவர்கள், இவ்வாண்டு வபாத்தாகி இறந்தார்கள்.

(2) மிஸ்ர் (எகிப்து) தேசத்துப் பண்டை ராஜப் பிரதியாகிய (கவர்னர்) அப்துல் அஜீஜ் பின் மர்வான் அவர்கள், அத்தா பின் ரபீஃ என்ற தளபதியுடைய தலைமையில், ஒரு கப்பல் படையை தயார் செய்து, ஸார்டினியா என்ற தீவைப் பிடிப்பதற்காக அனுப்பி வைத்தார். கடற் படை போய்க் கொண்டிருக்கும் போது, சமுத்திரம் பொங்கி பெரும் புயல் உண்டாய் விட்ட காரணத்தால், முஸ்லிம்களின் அந்தக் கப்பற் படை முழுதும் மூழ்கி அழிந்து போய் விட்டது. இது இஸ்லாத்துக்கு ஒரு நஷ்டமேயாம்.

(3) தென் ஆப்ரிக்காவில் அதிகாரியா யிருந்த மூஸா பின் நஸீர் என்பார், தூஸ் துறைமுகத்தி லிருந்து ஒரு யுத்தக் கடற்

படையை திரட்டிக் கொண்டு, பெரும் முயற்சியினால் 'ஸோஸா' என்ற தீவைப் பிடித்து வெற்றிக் கொடி காட்டினார்.

(4) இஸ்லாமிய ஷரீஅத்தில் ஒரு இமாமாகவும், மாபெரும் அறிஞராகவும் பாராட்டப்படும் ஹஜ்ரத் அல்அஸ்வத் (ரஹ்) அவர்கள் இவ்வாண்டு வபாத்தாய் விட்டார்கள்.

ஹிஜ்ரீ-85.

(1) இஸ்லாமிய கலீபாவாக இருந்த அப்துல் மலிக் அவர்கள், திருமக்காவிலுள்ள கஃபா ஷரீபின் கட்டிடத்தை புதுப்பித்து நிர்மாணித்து வைக்கும் திருப்பணியை நிறைவேற்றினார்கள். இது முன்னர் துஷ்டன் யஜீதுடைய கிலாபத் ஆட்சியின் போது, கல் லெறியப்பட்டு சேத மடைந்துப் போயிருந்தது.

(2) உத்தம அதிபர் அப்துல் மலிக் அவர்கள், பிரபல தாபிஈயும் பேரறிஞருமான ஹஜ்ரத் ஸயீது பின் முஸய்யிப் அவர்களிடம் வேண்டிக் கொண்டு, பரிசுத்த குர்ஆன் வேதத்துக்கு முதன் முறையாக தப்ஸீர் என்னும் வியாக்யான விரிவுரை எழுதுவித்தார்கள். இவ்வாண்டே உலகில் முதல் தப்ஸீர் தயாரானது என்று சொல்லப்படுகிறது.

(3) அப்துல் அஜீஸ் பின் அபீ ஹாத்திம் என்ற அதிபர், 'உர்துபீல்' என்ற நகரத்தை உண்டாக்கி வைக்க அடிப்படை கோலினார்.

(4) இவ்வாண்டு எகிப்தில் (மிஸ்ரில்) ஹஜ்ரத் அப்துல் லாஹ் பின் ஜுஸ் (ரலி)யும், கூபாவில் அம்ரு பின் ஹுர்ரித் (ரலி)யும் வபாத்தாகி இறந்து போனார்கள்.

ஹிஜ்ரீ-86.

(1) இவ்வாண்டு ஷவ்வால் மாதம், கலீபா அப்துல் மலிக் அவர்கள், இஸ்திஸ்கா என்னும் நீர் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்து வபாத்தாய்-இறந்து போனார்கள். இப்பெரியாரின் மறைவுக்குப் பின், அவருடைய புதல்வர் 'வலீத்-அவ்வல்' என்ற பட்டப் பெயருடன், பனீ உமய்யாக்களின் 6-வது கலீபாவாக கலீபா பதவி ஏற்றுக் கொண்டார்.

(2) ஹஜ்ரத் அபூ அமாமத்துல் பாஹிலி (ரலி) என்ற பெரியார், ஷாம் (ஸிரியா) தேசத்தில் வபாத்தானார்கள்.

(3) இவ்வாண்டு அஹ்ஜாம் என்ற ஊரில் தாவூன் என்னும் (பிளேக்) தொத்து வியாதி பரவியது. பல முஸ்லிம் பிரஜைகள் மாண்டார்கள்.

(4) இதே ஆண்டு அரபு முஸ்லிம்கள், தவக்கா என்ற கோட்டையையும், அஹ்ஸாம் என்ற ஊரையும் பிடித்து இஸ்லாமியக் கொடியை காட்டினார்கள்.

(தொடரும்)

✻ ஏமாற்றம்! ✻

மாஸ்டர் ஹாரிஸ் பாபு

(3–வது பகுதி தொடர் கதை)

"ஆமாம். அப்படி எழுதினால் ஸலீம், உம்மஹானியை வெறுத்து விடுவான்; அவளை மணந்து கொள்ள மறுத்து விடுவான். எல்லோரும் அவனை அணுகி காரணம் கேட்பாங்க. அவன் விஷயத்தைச் சொல்லுவான். அது ஊர் பூராவும் பரவி விடும். அதற்கப்புறம் அவளை மணந்து கொள்ள எவன் வரப்போகிறான்? எப்படி நம்ம ஐடியா?"

'ஐடியா என்னமோ குட் ஐடியாதான். ஆனா இந்தக் காரியத்துக்குப் பயன்படாதே!"

"என்ன பிரதர்! இந்தக் காரியத்துக்காகவே என் மூளையில் ஸ்பெஷலாகத் தயாரானது. இதைப்போய் பயன்படாதுன்னு சொல்றியே!"

"அவளைக் கட்டிக்கிறவன் வேறெவனாக இருந்தாலும் இந்த ஐடியா உபயோகப்படும். அவன்தான் ஸலீம் ஆச்சே!"

"இருந்தா என்ன?"

"அவன் இந்த மாதிரி மொட்டை கடிதங்களை யெல்லாம் சட்டை செய்ய மாட்டானே."

"அப்போ, இவ்வளவு கஷ்டப்பட்டு உருவாக்கிய ஐடியா பிரயோஜனப் படாதுன்னு சொல்லு."

"இன்னும் என்ன வேண்டிகிடக்கிறது, சொல்ல. அது சுகமில்லாமல்தான் போய்விட்டதே" என்றான் ரபீக்.

"சரி இப்போ நீயும் யோசனைச் செய்து பார். உன் யோசனை எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்" கரீம் கூறினான்.

இருவரும் யோசனையில் ஆழ்ந்தனர். மீண்டும் அங்கே மௌனம் நிலவியது. சிகரெட்டுகள் புகையும், சாம்பலுமாக மாறிக் கொண்டிருந்தன.

நீண்ட நேர மௌனத்துக்குப் பின், கரீமின் தொடையில் கையை வைத்து அழுத்தி "இப்படி செய்யலாம்" என்றான் ரபீக்.

"எப்படி?" கரீம் கேட்டான்.

ரபீக் அவன் காதைக் கடித்தான்.

"என்ன!" பயத்தால் கரீமின் உடல் குலுங்கியது.

"ஏன் அப்படி பயப்படுறே?" ரபீக் கேட்டான்.

"அதில்லெ ரபீக்—இப்போ அவனை தீர்த்து விடுவதால் நமக்கென்ன பிரயோஜனம்?"

"உம்மஹானியைக் கல்யாணம் பண்ணிக்க போறவன், அவன் தானே?"

"அதற்காக அவனைக் கொலை செய்து விட்டால், இன்னொருத்தன் அவளைக் கட்டிக்க போறுன்."

"அவனையும் தீர்த்து விட்டால்?"

"நாமும் தீர்ந்துவிட வேண்டியதுதான்! ரபீக், இப்படி எத்தனை பேரை யமலோகத்துக்கு அனுப்பிக் கொண்டே இருப்பது? ஒரு தடவை இல்லாவிட்டாலும் இன்னொரு தடவை நாம் கண்டிப்பாக மாட்டிக் கொள்வோம்- ஒரு மாபெருங் குற்றத்தைச் செய்து விட்டு, அதை மூடிவிட நாம் எவ்வளவுதான் பணம் செலவு செய்தாலும் அது மறையாது-"

"அப்போ இந்த யோசனை பயன்படாதுன்னு சொல்லு" என்றுன் ரபீக்.

"இன்னும் என்ன வேண்டிக் கிடக்கிறது சொல்ல, அதுதான் பயனில்லாமல் போய் விட்டதே" என்றுன் கரீம்.

"நீ ஏதாவது யோசனை பண்ணினுயா?"

"ஒரு யோசனை தோணுது. ஆனு அதுவும் எங்கே பிரயோஜனமில்லாமே போய்விடுதோன்னு அஞ்சுறேன்"

"பரவாயில்லை, சொல்லு. பார்க்கலாம்."

"உம்மஹானி உன் அத்தை மகள் தானே?" கரீம் கேட்டான்.

"ஆமாம்ப்பா. சொந்த அத்தை மகள்தான்" ரபீக் கூறினுன்.

"அப்போ நான் சொல்றெபடி செய். கல்யாண தினத்தன்று, மாப்பிள்ளையை மஸ்ஜீதுக்கு அழைத்து செல்லும் போது நீயும் அவர்களுடன் போக வேண்டும்......"

"போய்?"

"அவசரப்படாதே. சொல்றேன், கேள், 'இந்தக் கல்யாணம் நியாயப்படி பார்த்தால் செல்லாது. பெண்ணுக்கு மாமன் மகன் நானிருக்கும் போது அவளை வேறே ஒருத்தன் எப்படிக் கல்யாணம் செய்து கொள்ளலாம்? அவள் எனக்குத்தான் சொந்தம். ஆகவே என்னைத் தவிர வேறெவர்க்கும் நிக்காஹ் ஓதக் கூடாது' என்று நீ சொல்ல வேண்டும். மாப்பிள்ளை முன்னிலையில் நிக்காஹ் ஓதும் போது நீ இப்படிச் சொன்னுல், மாப்பிள்ளை முகம் சுண்டி விடும்; அவமானம் தாங்கமாட்டாமல் மாப்பிள்ளை எழுந்து போய் விடுவான்.

அதற்குப் பிறகு மாப்பிள்ளை நீ தான். வேறு வழி இல்லாமல் உன்னை உட்கார வைத்து நிக்காஹ் படித்துட போருங்க" என்று கூறி முடித்தான் கரீம்.

ரபீக் மௌனமாக ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன பிரதர் பேச மாட்டேனென்கிறே?" என்று கரீம் கேட்டான்.

"ஊம்......நீ சொன்னது போல் செய்யலாம். ஆனால், அப்போ என் அப்பாவும் இருப்பாரே. அவரிடம் நம் யோசனை செல்லாதே" என்றான் ரபீக்.

"அப்போ இந்த ஐடியாவையும் கைவிட்டுவிட வேண்டியது தானு?"

"இல்லே! என் அப்பா, அப்போது அங்கே இல்லாமலிருக்க வழி கண்டு பிடித்து விட்டேன்."

"என்ன வழி கண்டு பிடித்தே?"

"கல்யாணத்துக்கு முந்திய நாள் நீ மெட்ராஸுக்குப் போய் மறுநாள் காலை என் அப்பாவுக்கு என் அக்கா கொடுக்குறமாதிரி ஒரு தந்தி கொடுக்க வேண்டும். அதாவது 'குழந்தை பிழைப்பது அரிது. உடனே பிறப்பட்டு வரவும்—கஜ்மா—' இந்த மாதிரி கொடுக்க வேண்டும். ஆனால் நீ கொடுக்குறே தந்தி என் அப்பாவுக்கு சரியாக ஒன்பது மணிக்கு அதாவது நிக்காஹ் ஓதுவதற்கு ஒரு மணி நேரம் முந்தி கிடைக்க வேண்டும். தந்தியைக் கண்டவுடன் என் அப்பா, என்னமோ ஏதோ வென்று போய் விடுவார். அப்போ தான் உன் யோசனைப்படி செய்ய தோதாகும்" ரபீக் கூறினான்.

"கல்யாணத்துக்கு உங்க அக்கா வரமாட்டாங்களா?" கரீம் கேட்டான்.

"வருவாங்க. ஆனால் கல்யாணத் தினத்தன்று ஒன்பதே முக்கால் மணி ரயிலுக்கு வருவாங்க. அவங்க வருவதற்குள் தான் இவர் இங்கிருந்து கிளம்பிடப்போருரே"

"சரி. கல்யாணம் எப்போ?"

"இந்த மாசம் பிறை இருவத்தியேளு, வெள்ளிக்கிழமை"

* * * *

அன்றிரவெல்லாம் உம்மஹானியை, அவளுடைய சிநேகிதைகளெல்லாம் சேர்ந்து கேலியும் பரிகாசமும் செய்தனர். ஏனெனில், விடிந்தால் வெள்ளிக்கிழமை; திருமண நாள். உம்மஹானியின் உள்ளங்கைகளிலும், கால்களிலும் அரைத்த மருதாணி யிலையைத் தடவினர். உம்மஹானி, 'பொழுது எப்போது விடியும், விடியும்' என்றிருந்தாள்.

ஒருவாராகப் பொழுது புலர்ந்தது. மணமகளை–உம்மஹானியை–சீவி சிங்காரித்து தேவலோகக் கன்னியாக மாற்றி விட்டனர். 'பொழுது எப்போது விடியும்' என்று காத்திருந்த உம்மஹானி, பொழுது விடிந்த பின், 'பொழுது எப்போது மறையும், இரவு எப்போது வரும்' என்று ஆவலுடன் ஏங்கி கொண்டிருந்தாள்; 'தான் இன்று ஒரு மணப்பெண்' என்று நினைத்து நினைத்து அகமகிழ்ந்தாள். அங்கே வந்திருந்தவர்களெல்லாம் அன்று மகிழ்ச்சியும் சந்தோஷமுமாகக் காட்சி அளித்தனர். எல்லோரையும்விட சபியாபீயிக்குத்தான் சந்தோஷம் தலை கால் தெரியாமல் ஆடியது.

மணி எட்டேமுக்கால் ஆனது.

தபால் நிலய சேவகன் ஒருவன் ரஹ்மான் சாயபு இடம் ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுச் சென்றான். தந்தியைப் படித்துப் பார்த்த ரஹ்மான் சாயபுவின் முகத்தில் கவலைக் கோடுகள் படிந்தன. டிரைவரைக் கூப்பிட்டு காரை எடுக்கச் சொன்னார்; மணமகளின் தந்தை மஜீத் சாயபு இடம், "என் பேரனுக்கு உடம்பு சௌக்கியமில்லையாம். என்னை உடனே பிறப்பட்டு வரும்படி என் மகள் தந்தி கொடுத்திருக்கா......" என்று கூறி முடிப்பதற்குள்:

"கொழந்தே ஒடும்புக்கு என்னவாம்! நீங்க முந்தா நாள் மெட்ராஸுக்கு போய் வந்து கொழந்தே நல்லா சிரிச்சு ஆடிக்கிட்டு இருக்கான் என்றி சொன்னீங்களே?" மஜீத் சாயபு கேட்டார்.

"அப்போ நல்லாதான் இருந்தான். இப்ப என்னமோ திடீர்னு இப்படி தந்தி வந்திருக்கு! நான் அவசியம் இப்போ மெட்ராஸுக்குப் போகனும். நான் போகிறேன். நீங்க கல்யாணத்தை முடித்து விடுங்க" என்று கூறிவிட்டு போக திரும்பினார், ரஹ்மான் சாயபு.

"நீங்க இல்லாமே கல்யாணத்தை எப்படி நடத்துவது? கல்யாணத்தை வேணுமானால் நாளை வைத்துக்கொள்ளலாம்......"

"வேண்டாம். வேண்டாம். நிக்காஹ் நேரம் நெருங்கி விட்டது. இப்போ கல்யாணத்தை ஒத்திவைப்பது நல்லா தெரியலே. நீங்கள் எல்லோரும்தான் இருக்கிறீங்களே காரியத்தை முடித்து விடுங்க. என்ன? நான் போகிறேன்" என்று கூறிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்தார்.

காரை 'ஸ்டார்ட்' செய்து விட்டு "எங்கே போகனும்?" என்று கேட்டான் டிரைவர்.

"மெட்ராஸுக்கு" என்றார் ரஹ்மான் சாயபு.

கார், இருபதாவது மைலை வேகமாகத் தாண்டிக் கொண்டிருந்தது; சிறிது சிறிதாக வேகம் குறைந்து கொண்டு வந்தது; கடைசியில் கார் நின்றே விட்டது. (தொடரும்)

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

அத்தியாயம் 4.

உணர்ச்சிகளை உணர்த்தி விட்டோமா என்ற உள்ளச்சம அவருக்கு ஏற்பட்டது. உணர்ச்சி வெளிப்படுதலைத் தடுப்பதற்கு அவரது சக்திகளனைத்தும் பிரயோகிக்கப் பட்டன. சிப்கத்துல்லா சினம் கொண்டாரெனினும், உள்ளடங்கிக்கிடந்த மிருக உணர்ச்சி கொலைபாதகச்செயலை தூண்டிய தெனினும் வெளியரங்கமாக வெகுண்டவன் போல அவர் காட்டிக் கொள்ளவில்லை. அதிர்ச்சியுற்ற நிலையில் சிறிது நேரம் பேச்சு அல்லது நடமாட்டம் இல்லாமல் இருந்தார்.

"காப்டன் காதிரி" என்போன் கரீம் ஷரீபின் மகன் காதர்கான். கொடிப்பொழுதில் பயங்கர சதியை அவர் உணர்ந்தறிந்து கொண்டார்; கேடுகெட்ட மைந்தனை கரீமுல்லாவின் மகளுக்கு மணமுடித்துவைத்து வஞ்சம் தீர்ப்பதற்கென கரீம்ஷரீப் மேற்கொண்ட நடவடிக்கை அது.

அவரை காதர்கான் உற்றுக் கவனித்தான்; ஆனாலும் சிப்கத்துல்லா அவனை அறிந்துக் கொண்டதை சமிக்ஞையால்கூட காட்டிக் கொள்ளவில்லை. ஒரு வினாடிக்குள் நிலைமையை நிதானித்துக் கொண்டு மரியமை நோக்கினான் அவன். இயந்திரம்போல் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள். சுற்றுப் புறத்தையும் சூழ் நிலையையும் மறந்தவளாக அவள் காணப்பட்டாள். அருகில் கணவன் நின்று வியப்போடு விழித்துக் கொண்டிருந்ததும் தந்தை கவலையோடு முகத்தைச் சுளித்துக் கொண்டிருந்ததும் பட்லர் பஷீர் வாயைப் பிளந்து கொண்டு வாளா நின்று கொண்டிருந்ததும் அவளது கவனத்தையும் கருத்தையும் கவரவில்லை.

சிப்கத்துல்லாவை விளித்து அவள் வினவினாள்: "நீங்கள் என் மீது வெறுப்புக் கொண்டிருக்கவில்லை அல்லவா?"

சிப்கத்துல்லா சிரித்துக் கொண்டே அவளது கரத்தைத் தட்டிக் கொடுத்தார்.

"நீ சந்தோஷமாக இருக்கிறாயா?"--தாழ்ந்த குரலில் அவர் வினவினார்.

"ஆமாம்; எனக்கு மங்களகரமாக மணம் நடந்தேறி விட்டது. நீங்கள் கேட்பது அதுதானே? நான் மிகவும் சந்தோஷமாக விருக்-

கிறேன்......எனது மண விஷயம் உங்களுக்கும் பிடித்திருக்கிற தல்லவா? உங்களைப் பற்றி நான் சிந்திக்காம லிருக்கவில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு நான் கடித மெழுதுவதையும் நிறுத்திக் கொண் டது வாஸ்தவம்; ஆனால் உங்களை நான் மறக்கவில்லை. நான் ஒரு மிருகம் என நீங்கள் நினைக்கிறீர்களா? நான் ஒரு மிருகம் என்பது எனக்குத் தெரியும். உங்கள் மனம் புண்பட்டு விட்டதா?"

அவர் தலை அசைத்தார்.

"நீங்கள் சிறையில் இருந்திருக்கவே கூடாது. உங்களுக்காக வருத்தப் படுகிறேன். நீங்கள் மன மகிழ்ச்சியோடு இருக்கிறீர்களா?"

அவரது கண்களை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

"ஒரு நிமிஷத்தில் இருதடவை வினவியாகி விட்டது. காதரை காண விருப்பமா?"

"ஏன், அவரைச் சந்திப்பதற்கு ஆவலுள்ளவனாகத்தான் இருக் கிறேன்."

அந்த மனிதனை அவர் நெருங்கினார். அவரைக் காதர்கான் கவனித்தான்.

"இவர் காப்டன் சிப்கத்துல்லா; எனது பழைய நண்பர்களி லொருவர்" என்று 'சிறைப்பறவை' யை கணவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் மரியம்.

சிப்கத்துல்லாவின் கரங்களை காப்டன் காதிரி பற்றிக் குலுக் கினான்.

"காப்டன் சிப்கத்துல்லா, உங்களைச் சந்தித்ததுபற்றிச் சந்தோஷ மடைகிறேன்."

அவனை அடையாளம் கண்டுவிட்டானா? இருக்காது. ஏனெனில் அவன் பக்கம் திரும்பிய முகத்தில் புன்முறுவல் காணப்பட்டது.

"எழில்மிகு எகிப்து தேசத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறீர்க ளல்லவா? வட ஆப்ரிக்காவில் வன விலங்குகளை வேட்டையாடினீர் களா?"

"இல்லை, நான் வேட்டையாடியது கிடையாது" என்றார் சிப்கத்துல்லா.

"அங்கு ஏராளமான சிங்கங்கள் இருக்கின்றன அல்லவா?"

பழைய கைதியின் உதடுகள் அகல விரிந்தன.

"நான் வசித்த அந்தப் பகுதியில் சிங்கங்கள் பழக்கப் படுத்தப் பட்டவை; பயங்கரமானவையல்ல."

"மரியம், மண தினத்தன்று சிப்கத்துல்லாவைக் காண்பதில் களிபேருவகை கொள்கிறாயல்லவா? நீங்கள் இங்கு வந்தது மகிழ்ச்சி

அளிக்கிறது. சிப்கத்துல்லா சாஹிப்! ஜனுபா காதிரி, உங்களைப்பற்றி அடிக்கடி சொல்லி யிருக்கிருள்.”

சிப்கத்துல்லாவின்மீது வைத்தகண் வாங்காமல் மனைவியை அழைத்தான். அவர்களிருவரையும் புண்படுத்துவதென எண்ணங் கொண்டான். பேச்சு, மூச்சு இல்லாமல், இரத்தம் வெளிரியவளாய் விறைப்பாக நின்ருள் அவள். அவளுக்குத் தெரியும்! சிப்கத்துல்லா வுக்கு உண்மை புலனுயிற்று: அம்மனிதன் பொய்யன், பித்தலாட்டக் காரன் என்பதை அவள் அறிந்து விட்டாள். தனது தந்தைமீது செய்யப்பட்டிருக்கும் சதியை அவள் தெரிந்து கொண்டு விட்டாள்.

“சந்தோஷமாக இருக்கிருயா அம்மா?”

“ஆம். மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்.”

அவளது குரலில் படபடப்பு காணப்பட்டது. சிப்கத்துல்லா தடுமாறினர்; நிலைமையைச் சமாளிப்பதற்கு இயலாமல் திணறினர். நிலைமையை உணர்ந்து, உதவிபுரிய முன்வந்தார் கரீமுல்லாகான்.

“சிப்கத்துல்லா! எனது மாப்பிள்ளையை நீ அறிந்து கொள்ள வேண்டு மென நான் விரும்புகிறேன். தரணியில் தலை சிறந்தவர். மாநிலத்தில் மரியமுக்கு உகந்த மணளர் அவர் என்ற எனது எண்ணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டு மென விரும்புகிறேன்.”

காதர்கான் மெல்லச் சிரித்தான். “கரீமுல்லா சாஹிப்! என்னை நீங்கள் அளவு மீறி புகழ்கிறீர்கள்; மரியமுக்கு மணளனுக வாய்த்தது எனது அதிர்ஷ்டமேயாகும். எனது அதிர்ஷ்டத்துக்கு அருகதையற்ற அவலட்சணமான மிருகம் நான்.”

பூங்கொடியாளைப் பார்த்து புன்னகை புரிந்தான் அவன். அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சிப்கத்துல்லா.

“சந்தோஷம்! நீ சந்தோஷமாய் இருக்கிருய் என்பது எனக்கு நன்ருகத் தெரியும்” என்ருர் கரீமுல்லா.

“பாவா, சிப்கத்துல்லா சாஹிபுக்கு இது மகிழ்ச்சி அளிக்கிற தென நான் நினைக்கவில்லை.” என்ருள், மரியம். அவளது குரலில் அதிர்ச்சி காணப்பட்டது. காரிகையின் கண்களி லிருந்து கண்ணீர் கசிந்து கொண்டிருக்கிற தென்பதை சிப்கத்துல்லா உணர்ந்து கொண்டார்.

சிப்கத்துல்லா இப்போது பேசினர்: “இளந் தம்பதிகளின் இன்பம்—நான் முதுமை யடைந்தவன் என்ற உணர்ச்சி எழுகிறது- எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. நீங்கள் பட்டாணியரா காப்டன் காதிரி?”

“ஆம், பம்பாயைச் சேர்ந்த பட்டாணியன் நான். எனது முன்னேர் சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியில் கனடாவுக்குச் சென்று

அங்கேயே தங்கி விட்டார்கள். ரயில் வண்டி கண்டு பிடிப்பதற்கு முன்பே அவர்கள் ஆல்பர்டா, ஸஸ்கிச்சிவான் ஆகிய இடங்களில் குடியேறி விட்டார்கள். நீங்களும் கனடாவுக்குச் செல்ல வேண்டும்; அந்நாட்டை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள் என்பது திண்ணம்.”

“சந்தர்ப்பம் கிடைத்தால் அங்கு நிச்சயமாக நான் செல்வேன்.”

மரியமை அழைத்துக் கொண்டு, கரீமுல்லா சென்று விட்டார்.

“கனடாவில் சிங்கங்கள்—பழகியவையோ அல்லது பயங்கர மானவையோ—கிடையாது.”

“சிங்கங்கள் இல்லாவிடில் நான் ஏகாந்த உணர்ச்சி பெற்று ஏங்கி விடுவேன். காப்டன் காதிரி, மிக கேர்த்தியான பெண்ணையே நீங்கள் மணந்து கொண்டிருக்கிறீர்கள்.”—சிகரெட் பற்ற வைத்துக் கொண்டே சிப்கத்துல்லா சொன்னார்.

“மிகச் சிறந்த பெண்”

“அவளுக்குப் பணிவிடை செய்வதற்காக நான் நீண்ட தூரம் கூட செல்வதற்குச் சித்தமாக இருக்கிறேன். சிங்கங்களிடம் திரும்பிச் செல்வதற்கும் நான் தயங்க மாட்டேன்.”

அவர்களது கண்கள் சந்தித்தன—மணமகனின் கண்களில் அறை கூவல் மறைந்திருந்தது; ‘சிறைப் பறவை’ யின் கண்களில் கொலை எண்ணம் மறைந்திருந்தது. காதர்கானின் கண்கள் கீழ் நோக்கின; அவன் அதிர்ச்சி யுற்றவன் போல காணப்பட்டான்.

“வேட்டை யாடுதலை நீங்கள் விரும்புகிறீர்களென நான் நினைக் கிறேன்—இல்லை, நீங்கள் வேட்டையாடுவதற்கு விரும்பியதில்லை என்று சொன்னீர்களல்லவா? உங்களைப் போன்ற பண்பு மிக்கவர் ஏன் வெளி நாடு செல்ல வேண்டு மென்பது எனக்கு விளங்கவில்லை.”

அழுத்தம் திருத்தமாக சிப்கத்துல்லா பதில் அளித்தார்: “நான் அனுப்பி வைக்கப் பெற்றேன். என்னை வெளி நாடு அனுப்பி வைப்பதில் யாரோ ஒருவருக்கு அனுகூலம் இருந்தது-அவரது வழியில் குறுக்கே நிற்கக்கூட தென அவர் விரும்பினார்; எந்த விதத் திலும் நான் சென்று தான் இருப்பேன்; ஆனால் இம்மனிதர் எனது பிரயாணத்தைத் துரிதப்படுத்தினார்.”

“அம்மனிதர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

கனடா, வட ஆப்ரிக்கா என்று வம்பளந்த தெல்லாம் போய், உண்மைப் போராட்டத்தில் இருவரும் இறங்கி விட்டனர். காதர்கான் ‘முகமூடி’யை எடுத்து விட்டு தைரியமாகவும் பத்திரமாகவும் பேச லாம்; ஏனெனில் சிப்கத்துல்லாவின் சிறைவாசத்துக்கான காரணம் பகிரங்கமானது.

"அந்த மனிதனை எனக்குத் தெரியாது; என்னைப் பொருத்த வரை, அவன் அன்னியன். அவனைத் தெரிந்தவர்கள் வெகு சிலர் தான். அவனது கூட்டத்தினரில்—எங்கள் கூட்டத்தினரில்—ஆறு பேர் கூட அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. போலீஸ் இலாகாவில் ஒரே ஒரு மனிதர் தான் அவனைத் தெரிந்து வைத்திருக் கிறார்."

"அவர் யார்?"

"ரஜாக்கான் என்று அழைக்கப்படுகிறார் அவர். சிறைச்சாலை யில் அந்தப் பெயரை நான் கேள்விப் பட்டேன்—சிறைச்சாலையி லிருந்து சமீபத்தில் விடுதலையானவன் நான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்."

புன்முறுவலுடன் தலை அசைத்தான் காதர்கான்.

"ஊர் பேர் தெரியாத பெரிய மனிதன்" என்று அந்த ரஜாக்கானை அழைக்கிறார்கள். கிளப்பில் அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக் கிறேன். நடுத்தர வயதுடைய அவன் பெரிய முட்டாள். எனவே, உங்கள் அதிசய மனிதனைப் போல அவரும் அறிமுகமில்லா தவர்"

"அவ்வாறு இருக்கக்கூடும். கைதிகள் அவர்களது வீரர்களுக்கும் பகைவர்களுக்கும் அசாதாரண, அமானுஷ்ய சக்திகளிருப்பதாக கூறுவது வழமையே. என்னிடம் தெரிவிக்கப்பட்டது மட்டுமே எனக்குத் தெரியும். நான் இருந்த சிறையில் ரஜாக்கான் அனைத்தும் அறிந்தவர் எனச் சொல்லிக் கொண்டார்கள். கள்ள நோட்டு அச்சிடும் பெரும் பேர் வழியைக் கண்டு பிடித்து கைது செய்வதற்காக அந்த போலீஸ் அதிகாரிக்கு அரசாங்கத்தினர் முழு அதிகாரம் அளித்திருக் கின்றனர்."

"அவனைக் கண்டு பிடித்தாகி விட்டதா?"

"அவனை அவர் கண்டு பிடித்து விடுவார். வெகு சீக்கிரம் அல்லது சிறிது காலத்துக்குப் பிறகு, குற்றவாளி 'கம்பி' எண்ண வேண்டி யிருக்கும்."

"அந்த விசாரணையின் போது அதனைக் கேட்பதற்கு அங்கு நான் இருப்பேனாக."—காதர்கான் பல்லிளித்தான்.

(தொடரும்)

சென்னை-600 008.
187059

அரைவிலை! அரைவிலை!!

மனாயிஹுல் அன்வார் பீ மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸூபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் நூரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில் எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரை விலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–0–0க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொர்ப்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

(இரண்டாவது பாகம்)

அத்தியாயம் 3.

இறைமறை இயம்புவ தென்ன? குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்தி யாது? இன்னோரன்னபிற கேள்விக்கு விடையளிக்கும் முறையில் அருமறையிலிருந்து சிற்சில பகுதிகளைக் கீழே தந்திருக்கிறோம்:

பிரார்த்தனை

அகிலங்கள் அனைத்துக்கும் அதிபதியாகிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும் உரியது.

அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன், நியாயத்தீர்ப்பு நாளின் எஜமானன்.

(இறைவா) உன்னையே வணங்குகிறோம், (மேலும்) உன்னிடமே உதவி தேடுகிறோம்.

எங்களை நேரிய பாதையில (சீரிய முறையில்) வழி நடத்துவாயாக.

அது உனது அருட் கொடைகளை பெற்றவர்களுடைய வழி, உனது கோபத்துக்கு ஆளானவர்களுடையவும் வழிதவறிச் சென்றவர்களுடையவும் வழியல்ல.

இறைவனின் இயல்பு

சொல்க! அவன்—அல்லாஹ் ஏகன்.

அல்லாஹ்—நித்திய ஜீவியம் பெற்றவன்.

அவன் (மக்களைப்) பெறுவதுமில்லை; அவன் (மக்களால்) பெறப்படுவதுமில்லை.

அவனுக்கு இணை துணை கிடையாது.

அவனிடம் வானங்களுடையவும் பூமியினுடையவும் இரகசியம் இருக்கிறது.

(எனவே) சிந்தித்து அவனுக்கு மட்டுமே செவி சாயுங்கள்; அவனைத்தவிர, மனிதனுக்கு வேறு பாதுகாவலன் கிடையாது, அவனது தீர்ப்புகளில் எவரும் பங்கு கொள்வதுமில்லை.

வானங்களிலும் பூமியிலும் இருப்பனவெல்லாம் அல்லாஹ்வினுடையவை; உங்கள் மனத்திலிருப்பதை நீங்கள் பகிரங்கப் படுத்தி

னாலும் சரி, அல்லது அதனை அந்தரங்கமாக வைத்தாலும் சரீ, அதற்காக அவன் உங்களிடம் நிச்சயமாக கேள்வி கணக்கு கேட்பான்.

வானங்களிலும் பூமியிலும் இருப்பன வெல்லாம் இறைவனுக்குத் தெரியுமென்பதை நீங்கள் உணரவில்லையா? மூன்று நபர்களிடையே அந்தரங்க சம்பாஷணை எதுவும் நடைபெறுவதில்லை; ஆனால் அவர்களில் அவன் நாலாவதாக இருக்கிறான். இதைவிட எண்ணிக்கை சிறிதாக இருந்தாலும் சரி, அல்லது பெரிதாக இருந்தாலும் அவர்களுடன் அவன் இருக்கிறான்—அவர்கள் எங்கு இருந்த போதிலும் சரியே. இறுதித் தீர்ப்பு நாளில் அவர்கள் செய்தவற்றை அவர்களிடம் அவன் எடுத்துரைப்பான். ஏனெனில் அவன் அனைத்தும் அறிந்தவனாக விருக்கிறான்.

வானங்களிலும் பூமியிலும் உள்ள இரகசியங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. அவன் அளவில் அனைத்து பொருள்களும் மீள்கின்றன.

எனவே, அவனையே வணங்கி, அவனிடமே விசுவாசம் வையுங்கள்.

உங்களது செயல்களை உங்கள் இறைவன் அறியாமலில்லை.

வானத்திலும் பூமியிலுமிருந்து உங்களுக்கு உணவளிப்பவன் எவன்?

கேள்விப் புலன்மீதும் பார்வை சக்திமீதும் ஆற்றல் மிகுந்தவன் எவன்? உயிர் துறந்தோரை உயிர்ப்பிப்பவனும் உயிர் உள்ளோரிலிருந்து உயிர் துறந்தோரையும் கொண்டு வருபவன் எவன்? நிச்சயமாக "இறைவன்" என்று அவர் விடை பகர்வார்கள். ஆகவே, கூறுக: "எனவே, நீங்கள் அவனை அஞ்சிக் கொள்ள மாட்டீர்களா?"

சிறப்புப்பெற எவராவது விரும்புகிறாரா? எல்லா சிறப்பும் இறைவனிடம் இருக்கிறது. நல்ல வார்த்தை அவன் அளவில் (உயர்ந்து) செல்கிறது; நேரிய செயலுக்கு அவன் சன்மானம் அளிப்பான். அநீதி செய்வதற்குத் திட்டமிடுவோனுக்கு பயங்கர தண்டனை காத்திருக்கிறது; இத்தகையோரின் தந்திரோபாயங்களை அவன் தவிடு பொடியாக்கி விடுவான்.

ஏ மனிதர்களே! இறைவனிடம் தேவையைப் பொறுத்தவரை நீங்கள் ஏழைகள். ஆனால் இறைவன் (உங்களது தேவையை விட்டு நீங்கிய) செல்வந்தன், புகழுக்குரியவன்.

சிருஷ்டி

அவனது உள்ளமை (உண்மை)யை வெளிப்படுத்துவதற்காக வானங்களையும் பூமியையும் அவன் (அல்லாஹ்) சிருஷ்டித்திருக்கிறான். அவனுக்கு இணையாக அவர்கள் கற்பிக்கும் கடவுள்களைவிட அவன் உயர்ந்தவன்.

பூமியின் மீது கடினமான மலைகளை அவன் பாரமாக்கி வைத்தான்; அதனை ஆசிர்வதித்து, எல்லோரின் விருப்பத்துக்ிணங்க உணவை அவன் வினியோகித்து வைத்தான்.

அல்லாஹ்—ஜீவித்திருப்பவனும் நிலைத்திருப்பவனு மாகிய அவனைத்தவிர வேறு தெய்வம் இல்லை. அவனை சோர்வோ அல்லது நித்திரையோ அணுகுவதில்லை. வானங்களில் இருப்பவைகளும் பூமியில் இருப்பவைகளும் அவனுக்குச் சொந்தமானவை. அவனது அனுமதியின்றி அவனிடம் மன்றாட்டம் புரிபவர் எவருளர்? அவர்களுக்கு முன்னால் இருந்ததையும் பின்னால் இருக்கப் போவதையும் அவன் அறிவான். அவன் விரும்புவதைத் தவிர அவனது அறிவில் ஒரு சிறு பகுதியையும் அவர்களால் அறிந்துணர்ந்து கொள்ள முடியாது. வானத்தின்மீதும் பூமியின்மீதும் வியாபிக்கும் வண்ணம் அவனது சிம்மாசனம் உயர்ந்தது. இரண்டையும் தாங்கிப் பிடிப்பது அவனுக்குப் பாரமல்ல. அவன் உயர்ந்தோனாகவும் சக்தி படைத்தோனாகவும் இருக்கிறான்.

வானங்களிலும் பூமியிலும் இருப்பன வெல்லாம் அவனது புகழ் பாடுகின்றன. பலசாலியாகவும் விவேகியாகவும் அவன் இருக்கிறான். வானம், பூமியினுடைய அரசாட்சி அவனுடையது. அவன் உயிரளிக்கிறான், உயிர் துறக்கச் செய்கிறான், அவன் சர்வ வல்லமையுள்ளவன். ஆதியும் அந்தமும் அவனே; அவன் பகிரங்கமானவனும் மறைவானவனுமாகும். அவன் அனைத்தும் அறிந்தவன்......புவிக்குள் பிரவேசிப்பதையும் அதினின்று வெளிப்படுவதையும் அவன் அறிவான்; வானத்திலிருந்து இறங்குவதும் வானத்துக்கு உயர்வதும் அவனுக்குத் தெரியும். நீங்கள் எங்கெங்கு இருந்தாலும் அங்கங்கு உங்களுடன் அவன் இருக்கிறான்; ஏனெனில் நீங்கள் செய்வதை இறைவன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். வானம், பூமியினுடைய அரசாட்சி அவனுடையது. அல்லாஹ் அளவில் அனைத்தும் மீளக்கூடியது. பகலைத்தொடர்ந்து இரவு ஏற்படவும் இரவைத் தொடர்ந்து பகல் ஏற்படவும் அவன் செய்கிறான். மனிதரது இதயத்தில் இரகசியமாக இருப்பதையும் அவன் அறிவான்.

தான தர்மம்.

மற்றவர்களின் பொருளைக்கொண்டு அதிகரிக்க வேண்டு மென்பதற்காக கடுவட்டிக்கு நீங்கள் கொடுப்பதெல்லாம் அல்லாஹ்விடம் அதிகரிப்பு பெறுது; ஆனால், இறைவனின் திருவதனத்தை நினைத்தவர்களாய் நீங்கள் அளிக்கும் தானதர்மம் உங்களுக்கு இரட்டிப்பாக்கப்பெறும். எனவே, பலமனைத்தையும் கொண்டு பரமனுக்குப்பயந்து கொள்ளுங்கள், அவனுக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படியுங்கள். உங்களது சொந்த நன்மையை உத்தேசித்து தானதர்மம் செய்யுங்கள்;

ஏனெனில் பேராசையினின்று விடுபட்டவர்களே செழித்தோங்குவர். இரவிலும் பகலிலும் பகிரங்கமாகவும் மறைவாகவும் தம்மிடமிருப்பதிலிருந்து தர்மம் செய்பவர்கள் அவர்களது இறைவனிடம் சன்மானம் பெறுவர்; அவர்களுக்கு எவ்வித பயமும் வந்தணுகாது; அவர்கள் சஞ்சலப்பட வேண்டியதுமில்லை.

நீங்கள் கொடுப்பதையும் நீங்கள் பிரதிக்ஞை செய்து கொள்வதையும் அல்லாஹ் அறிந்திருக்கிறான். அநியாயமாக நடந்துகொள்பவர்களுக்கு உதவியாளர் யாரும் இருக்க மாட்டார்கள். தானதர்மங்களைப் பகிரங்கமாகச் செய்யுங்கள். அது நல்லது. ஏழைகளுக்கு இரகசியமாக நீங்கள் கொடுக்கிறீர்களா? இதுவும் நல்லது; உங்களுக்கு பயன் விளைவித்து பாவங்களை விட்டுச் சுத்தமாக்கும். உங்களது செயல்களை அறிந்தோனாக அல்லாஹ் இருக்கிறான்.

இரக்க சிந்தையும் விருந்துபசரணையும் வேண்டற்பாலது. பெற்றோர்களிடமும் நல்லவிதமாக நடந்து கொள்ளுங்கள்; சுற்றத்தார்களிடமும் அனாதைகளிடமும் ஏழைகளிடமும் அயலகத்தாரிடமும்—உறவினராயினும் புதியவராயினும் சரி—சகபிரயாணியிடமும் வழிப்போக்கனிடமும் உங்களது வலக்கரம் சுவீகரித்துக் கொண்டுள்ள அடிமைகளிடமும் நன்றாக நடந்து கொள்ளுங்கள்.

பெற்றோர்கள்.

மேலும் பெற்றோர்களிடம் இரக்கம் காட்டவேண்டுமென்பதை மனிதன் மீது நாம் கடமையாக்கி யிருக்கிறோம். வேதனையோடு அவனை அவனது அன்னை சுமந்து வேதனையோடு அவனைப் பிரசவிக்கிறாள்; அவனுக்குப் பாலூட்டும் காலம் முப்பது மாதமாகும். அவன் பலம்பெற்று நாற்பது வயது அடைந்ததும் அவன் கூறுகிறான், "ஏ, எனது இறைவா! எனக்கும் எனது பெற்றோர்களுக்கும் அளித்துள்ள அருட்கொடைகளுக்காக நன்றியறிதலுள்ளவனாக என்னை ஆக்கிவை."

அவனையன்றி வேறுயாரையும் வணங்கலாகாது என்றும் உங்களது பெற்றோர்களிடம் அவர்களில் ஒருவராவது அல்லது இருவரும் வயது சென்றபோது—இரக்கம் காட்டுங்கள் என்றும் இறைவன் பணித்திருக்கிறான். அவர்களை (பெற்றோர்களை) நோக்கி "சீ" என்று கூட சொல்லாதீர்கள். அவர்களைத் தூஷிக்கவும் செய்யாதீர்கள். அவர்கள் இருவரிடமும் மரியாதையுடன் பேசி அவர்களிடம் தாழ்ந்து பணிந்து, அன்பின் அடையாளமாகச் சொல்லுங்கள்: "இறைவா! நான் சிறுவனாக இருந்தபொழுது என்னை அவர்கள் வளர்த்து வந்ததைப் போன்று அவர்கள் இருவர் மீதும் கிருபை செய்வாயாக."

அனாதைகள்.

அனாதைகளுக்கு அவர்களது சொத்தைக் கொடுத்து விடுங்கள். அவர்களது விலையுயர்ந்த பொருள்களைக் களவாடி, அவற்றுக்குப் பதிலாக உங்களிடமுள்ள உபயோக மற்ற வஸ்துக்களை வழங்கிவிடாதீர்கள். அவர்களது செல்வத்தை விழுங்கிவிடாதீர்கள்; ஏனெனில் அது பெரும் பாவம். அனாதைகள் குறித்து அவர்கள் உம்மை விசாரிக்கவும் செய்வார்கள். சொல்க, "அவர்களிடம் சீரிய முறையில் நடந்து கொள்வது சாலச் சிறந்தது. ஆனால் அவர்களுக்குச் சொந்தமான சொத்து நிர்வாகத்தில் நீங்கள் தலையிட்டால் அவர்களுக்குத் தீங்கிழைக்காதீர்கள், ஏனெனில் அவர்கள் உங்கள் சகோதரர்களாக இருக்கிறார்கள். நியாயமான நடப்போனையும் தீய எண்ணமுடையோனையும் அல்லாஹ் அறிவான். அல்லாஹ் நாடினால் நிச்சயமாக உங்களை துன்புறுத்துவான்."

இறைபக்தி.

கிழக்குத் திசையை நோக்கி முகத்தைத்திருப்புவதிலோ அல்லது மேற்குத் திசையை நோக்கித் திருப்புவதிலோ இறைபக்தி இல்லை. இறைவன் மீதும் இறுதித்தீர்ப்புநாள் மீதும் மலக்குகள்மீதும் வேதக் கிரந்தங்கள்மீதும் நம்பிக்கை கொண்டு, அல்லாஹ்விடமுள்ள நேசத்தினிமித்தம் சுற்றத்தாருக்கும் அனாதைகளுக்கும் தேவையுள்ளவர்க்கும் வழிப்போக்கர்க்கும் கேட்போர்க்கும் கைதிகளை மீட்பதற்கும் செல்வத்தைச் செலவிட்டு, தொழுகையைப் பேணுதலோடு நிறைவேற்றி, ஜக்காத் செலுத்துபவனும், வாக்குறுதிஅளித்தால் அந்த வாக்குதத்தத்தை நிறைவேற்றுபவர்களைச் சேர்ந்தவனும், கஷ்டங்கள் விளைந்த போதும் துன்பம் நேரிட்ட போதும் பொறுமையாக இருப்பவனுமே இறைபக்தி யுடையோனாவான். இத்தகையோர்தான் நேர்மையும் இறைபக்தியும் உடையவர்கள்; இவர்கள்தான் அவர்களது இறைவனை பயப்படுபவர்கள்.

தொழுகை

குர்ஆனில் உமக்கு வெளிப்படுத்தப் பட்டிருப்பதை ஓதிக் காட்டி, தொழுகையை நிலைநிறுத்தி வருவீராக. வெட்கக் கேடான, வெறுக்கத்தக்க செயல்களிலிருந்து விலக்குவதாக தொழுகை இருக்கிறது; நிச்சயமாக இறைவனைப் பற்றிய ஞாபகம் மிக முக்கிய கடமை யாகும்.

தொழுகையில் பேணுதலாக இருந்து வாருங்கள்; தான்தர்மமும் செய்யுங்கள். நீங்கள் எந்த நன்மையைச் செய்து உங்களுடைய ஆன்மாக்களுக்கு முன்னதாக அனுப்புகிறீர்களோ அதனை அல்லாஹ்வுடன் (இருக்க) நீங்கள் காண்பீர்கள்; ஏனெனில் நீங்கள் செய்வதைப் பார்ப்போனாக அல்லாஹ் இருக்கிறான்.

கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை; எனவே, தொழுகைக்கு நீங்கள் எந்த திசையில் திரும்பினாலும் அங்கு அல்லாஹ் இருக்கிறான்; ஏனெனில் எங்கும் நிறைந்தோனாகவும் எல்லாமுணர்ந்தோனாகவும் அவன் இருக்கிறான்.

நிச்சயமாக, இறைவனின் வேத கிரந்தத்தை ஓம்பி ஓதுவோரும் தொழுகையை பேணுதலோடு நிறைவேற்றுவோரும் நாம் அளித்திருப்பதி னின்று பகிரங்கமாகவும் மறைவாகவும் தான தர்மங்கள் செய்வோரும் அழியா சன்மானத்தை எதிர் பார்க்கலாம்.

சரியான நிறை, அளவு.

அளவு அல்லது நிறையில் பித்தலாட்டம் செய்வோருக்கு அந்தோ!—மற்றவர்களிடமிருந்து பெறும் போது முழு அளவு வாங்கிக் கொள்கிறார்கள், ஆனால் திருப்பிக் கொடுக்கும் போது அல்லது நிறுத்துக் கொடுக்கும் போது மோசம் செய்து விடுகிறார்கள்—மீண்டும் உயிர்த்தெழுதல் உண்டென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டிருக்க வில்லையா?

அந்த நாள்—அந்த நாளில் அகிலங்கள் அனைத்துக்கும் அதிபதியானோன் முன்பு மனித வர்க்கம் நிற்கும். அருள் நிறைந்த அல்லாஹ் அவனது அடியாருக்கு குர்ஆனை கற்றுக் கொடுத்து, மனிதனைச் சிருஷ்டித்து, பேசும் சக்தியை அவனுக்குக் கற்றுக் கொடுத்தான். சூரியனும் சந்திரனும் அவைகளுக்குரிய காலவரம்பு (நிர்ணயிக்கப்) பெற்றுள்ளன. செடிகளும் மரங்களும் குனிந்து ஸ்தோத்திரம் செய்கின்றன.

வானத்தை அவன் உயரத்தில் வைத்துள்ளான், சரிசம நிலையையும் ஏற்படுத்தி யிருக்கிறான். வரம்பு மீறி நீங்கள் செல்லலாகாது. எனவே, நேர்மையாக நிறுத்துக் கொடுங்கள்; தராசை சரித்துப் பிடிக்காதீர்கள்.

புறம் பேசுவோர்

தூஷிப்போனுக்கும் புறம்பேசுவோனுக்கும் அந்தோ! செல்வத்தைச் சேமித்துக் குமித்து, எதிர் காலத்தை எண்ணி பத்திரப் படுத்தி வைக்கிறான்; அவனது செல்வம் அவனோடு என்றும் நிலைத்திருக்கும் என்று எண்ணுகிறான். இல்லை, இத்தகையோன் நிச்சயமாக எரியும் நெருப்பில் தள்ளப்படுவான். அந்த நெருப்பு எது என்பதை [illegible] எடுத்துரைக்க வல்லவர்? அது அல்லாஹ்வின் மூட்டி விடப்பட்ட நெருப்பு ஆகும்; கொடியோரின் உள்ளங்களில் அது உறையும்.

(தொடரும்)

187089

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

தஸ்கிறதுல் அவுலியா

(இதில் பதினேரு அவுலியாக்களுடைய
சரித்திரங்க ளடங்கி யிருக்கின்றன)

1-வது ஹஸரத் இமாம் ஜஃபறிஸ்ஸாதிக் றஹிம ஹுல்லா, 2-வது ஹஸரத் உவைஸுல் கறனீ றஹிமஹுல்லா, 3-வது ஹஸரத் ஹஸன் பஸரி றஹிமஹுல்லா, 4-வது ஹஸரத் மாலிக்கிப்னு தீனர் றஹிமஹுல்லா, 5-வது ஹஸரத் முஹம் மது வாஸிஃ றஹிமஹுல்லா, 6-வது ஹஸரத் ஹபீபு அஜமி றஹிமஹுல்லா, 7-வது ஹஸரத் அபூஹாதிம் பகீர் றஹிம ஹுல்லா, 8-வது ஹஸரத் அஹமதுப்னு குலாம் றஹிம ஹுல்லா, 9-வது ஹஸரத் ருபியதுல் அதவிய்யா ரஹிம ஹுல்லா, 10-வது ஹஸரத் புலைலுப்னு இயால் றஹிம ஹுல்லா, 11-வது ஹஸரத் இபுராஹீமுப்னு அத்ஹம் றஹிம ஹுல்லா ஆக இப்பதினேரு நாதாக்களுடைய சரித்திரங்கள் அடங்கிய நூல்.

கலிகோ பைண்டு விலை ரூ. 2—2—0

ஷை அறபுத் தமிழ் 1, 2, 3-பாகங்கள் ஒவ்வொரு பாகமும் விலை ரூ 2—2—0

தற்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா அவர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக் குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3—12—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

1957-வது வருஷத்தின்

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் சிக்கிரமாக செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10

நூறு காலண்டர்கள் விலை ரூ. 50

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.